**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 07.08.2025

SC. 32/2023

அ.சா 9 – சுப்ரமணியன் த/பெ தங்கமுத்து, HUDCO Hosur.

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் நாள் **சுப்ரமணியன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்ரமணியன் | தந்தை பெயர் | தங்கமுத்து |
| வயது | 53 | கிராமம் | நாமக்கல் |
| வட்டம் | நாமக்கல் | மாவட்டம் | நாமக்கல் |

<u>**முதல் விசாரணை : –**</u>

**( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஹட்கோ காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தேன்., இதற்கு முன்பு 2021 ம் வருடம் ராயக்கோட்டை வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது 11.07.2021 ம் தேதி உத்தனப்பள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் சரவணன் அலுவலலில் இருந்த போது ஓசூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற மருத்துவ நமுனாவை பெற்று ஓசூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது அ.சா 1 பசவராஜ் ஒசூர் குணம் மருத்துவமனைக்கு சென்று விட்டதாக தகவல் அறிந்து பின்னர் , குணம் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பசவராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண் 138/2021 ச/பி 294 (பி) , 324, 307 இதச ஆக வழக்கு பதிவு செய்து வைத்திருந்த வழக்கின் கோப்புகளை புலன் விசாரணைக்காக பெற்று எனது புலன் விசாரணை கடந்த 11.07.2021 ம் தேதி மதியம் 12.00 மணியை போல் இவ்வழக்கின் சம்பவ இடமான கொத்துர் பசவராஜ் நிலத்திற்கு அருகே சென்று சம்பவ இடச் சாட்சிகள் 1. மணிமாரன் 2. வெங்கட கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தாக்கல் செய்தேன். நான் தாயார் செய்த பார்வை மகஜர் **அ.சா.,ஆ 10** ஆகவும் மாதிரி வரைபடம் **அ.சா.,ஆ 11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது, பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் பசவராஜ் , சசிதர், மல்லையா, மணிமாரன், மற்றும் வெங்கட கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளின் விசாரணையில் இருந்து வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால், இவ்வழக்கில் கண்ட எதிரிகளை தேடி வந்த நிலையில், கடந்த 11.07.2021 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு அன்னையப்பா வீட்டில் வைத்து சாட்சிகள் அடையாளம் அவர்களிடம் கைதுக்கான காரணத்தை தெரிவித்து கைது செய்து , அவர்களில் 1. சுரேஷ் பாபு மற்றும் 2. அன்னையப்பா ஆகியோர்கள் தானக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் 1. அலகேஷ் குமார் 2. வெங்கடேசப்பா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அதில் எதிரிகள் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். 1 வது எதிரி அன்னையப்பா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்து சென்றால் தங்கள் வீட்டில் மறைத்து வைத்துள்ள கடப்பாரையையும் தங்களுக்கு அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன் என்ற பகுதி மட்டும் **அ.சா.ஆ 12** ஆகும். அந்த வாக்குமூலத்தின் படி 1வது எதிரி அவரது வீட்டில் மறைத்து வைத்திருந்த சுமார் 18 இன்ச் நீளமும் , 5 இன்ச் நீளமுள்ள கைப்படியும் இரும்பு வெட்டருவாள் – 1 ம் , சுமார் 45 இன்ச் நீளமும் , 1 இன்ச் சுற்றளவும் கொண்ட இரும்பு கடப்பாரை – 1 ம் சுமார் 64 இன்ச் நீளமும் 2 இன்ச் சுற்றவும் கொண்ட மரக்கட்டை ஒன்றும் , அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன் , அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இரும்பு வெட்டருவாள் அ.சா.பொ 1 ஆகவும் , கடப்பாரை அ.சா.பொ 2 ஆகவும் , கட்டை அ.சா.பொ 3 ஆகவும் , ஏற்கனவே அ.சா 1 மூலம் குறியீடு செய்யப்பட்டு விட்டது. பின்னர் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து , கைது செய்த விவரத்தை உறவினருக்கு தெரிவித்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களுக்கு படிவம் 91 தயார் செய்து சான்று பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.,ஆ 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், இவ்வழக்கின் சாட்சிகளான ஹரிஷ் குமார், வெங்கடேஷப்பா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு

21.07.2021 ம் தேதி சாட்சிகள் 1. பாலாஜி , 2. பிரகாஷ் 3. சதீஸ் குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், அ.சா 1 பசவராஜ் க்கு சிகிச்சை அளித்த ஒசூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி, மங்கையர்கரசி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்றை பெற்றேன் பின்னர், இவ்வழக்கின் 14.09.2021 ம் தேதி சசிதர் என்பவருக்கு சிகிச்சை அளித்த ஒசூர் இலட்சுமி தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு. அருண் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினார். பின்னர் 02.10.2021 ம் தேதி இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு. சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 21..01.2021 ம் தேதி எனது விசாரணை முடித்து அரசு வழக்கறிஞரிடம் ஒப்புதல் பெற்று எதிரிகள் மீது ச/பி 341, 294(பி), 324, 307 இதச ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ராயக்கோட்டைக்கும் உத்தனப்பள்ளிக்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும் . அ.சா.ஆ 9 ஆன முதல் தகவல் அறிக்கையில் 2 ம் பக்கத்தில் 5 வது வரியில் 11.07.2021 ம் தேதி பகல் 13.00 மணியை போல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். காரணம் , கைத்தவறுதலாக பதிவு செய்யப்பட்டு விட்டது. நான் பதிவு செய்த வாக்குமூலத்திலும் 13.00 மணியை போல் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ 10 ஆன பார்வை மகஜரானது 11.07.2021 ம் தேதி பகல் 12.00 மணியை போல் பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் தனி நபருக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றாலும் சரிதான். அங்கு தடுப்பு வேலிகள் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது அங்கு டிராக்டர் எதுவும் இல்லை. அ.சா 1 புகாரில் கூறியுள்ளபடி டரெய்லர் பதிவு எண்களை பற்றியோ அந்த வாகனம் யார் உரிமையாளர் என்றோ, அந்த வாகனம் எங்கிருந்து எடுத்து வரப்பட்டது என்றோ நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் , சரிதான். அ.சா 1 புகாரிலும் , எனது விசாரணையிலும் , நிலப்பிரச்சனையால் தான் சம்பவம் நடந்ததாகவும் , பிரச்சனைக்குரிய நிலத்தை கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து வாங்கியதாக தான் அ.சா 1 என்னிடம்

தெரிவித்துள்ளார். நான் மேற்படி கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, என்று எதிரிகள் தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரித்ததாகவும் விசாரணையில் கிருஷ்ணமூர்த்தி இரு தரப்பினருக்கும் உறவினர் என்பதால் அவர் இந்த வழக்கில் சாட்சியாக இருக்க மறுத்து விட்டார் என்று சாட்சி தெரிவித்தார். மேற்படி சங்கதியை பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களில் தனியாக குறிப்பு எதுவும் செய்யவில்லை. கிருஷ்ணமூர்த்தி என்பவர் 3 வது எதிரியின் சகோதரர் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாயார் செய்த மாதிரி வரைபடமான அ.சா.ஆ 11 ல் அன்னையப்பா நெட் ஹவுஸ் இருப்பதாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த நெட் ஹவுஸின் உரிமையாளரை நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. அங்கு வேலை செய்த நபர்களையும் நான் சாட்சியாக சேர்க்கவில்லை காரணம் நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது யாரும் அங்கு இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நிலத்தின் அருகே உள்ள நிலத்தின் உரிமையாளரான திரு. வெங்கடேஷ் என்பவரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் அ.சா 1 ன் சகோதரர்கள் 1. மல்லையா 2. பாலாஜி ஆகியோருக்கு நிலம் உள்ளதாக நான் குறிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா 1 பசவராஜ் சம்பவ இடத்திற்கு எந்த திசையில் இருந்து வந்தார் என்றும் , எதிரிகள் எந்த திசையில் இருந்து வந்தார்கள் என்றோ எனது விசாரணையில் கேட்டு தெரிந்து கொண்டேனா என்று எதிரிகள் தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி எதிரிகள் அனைவரும் சம்பவ இடத்தில் உள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் , பக்கத்து இடத்திலிருந்து தன்னுடைய இடத்திற்கு டிராக்டாரில் எரு எடுத்துக் கொண்டு வந்ததாக மட்டுமே நான் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என சாட்சி தெரிவித்தார். சம்பவ இடம் அருகே டிராக்டர் வரும் வழி உள்ளதா என்றால் இல்லை ஆனால் , அந்த நிலத்தின் வழியாக தான் வந்தது தெரிந்து கொண்டேன். டிராக்டர் சம்பவ இடம் வந்ததாக தடம் இருந்ததாக நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் குறியீடு செய்யவில்லை. கிருஷ்ணமூர்த்திக்கும் எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை இருந்ததாக கூறியுள்ளதற்கு அவர்களுக்கு உரிமையியல் வழக்கு இருந்ததா இல்லையா என்று இந்த வழக்கு சம்பவத்திற்கு தேவையில்லை என்பதால் அது பற்றி விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. இந்த இருவருக்கும் அசல் வழக்கு எண் 261/2014 என்ற வழக்கு

தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றாலும் , நான் அது பற்றி தெரிந்தே மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் உள்ள புறக்காவல் நிலையத்தில் இருந்து வான்செய்தி மூலம் தான் தகவல் வரப்பெற்றது. எழுத்து மூலமான தகவல் எதுவும் வரவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் மருத்துவமனையில் இருந்து வான்செய்தி மூலம் தகவல் கிடைத்ததாக குறிப்பு எதுவும் உள்ளதா என்று எதிரி தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்றாத தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சாட்சி தெரிவித்தார். வான்செய்தி என்று குறிப்பாக இல்லை. அ,சா,ஆ 6 ல் காரில் இருந்து இறங்கும் போது அரிவாள் மற்றும் கடப்பாரையால் தாக்கியதாக கூறினார் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ 6 ஆவணத்தில் மேற்படி உள்ளவாறு காரைப் பற்றி எனது விசாரணையில் சாட்சிகள் யாரும் சொல்லவில்லை. அ.சா 1 பசவராஜ் 11.07.2021 ம் தேதி உள்நோயாளியாகவும் 12.07.2021 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ 6 ல் CT Thorax No siginificant abnormelty is detected to chest and to right arm என்று எழுதப்பட்டுள்ளதில் அவ்வாறு CT எடுத்த மருத்துவரை மற்றும் அறிக்கையை விசாரித்து வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு குணம் மருத்துவமனையில் இருந்து தகவல் பெறவில்லை. குணம் மருத்துவமனை மெடிகோ லீகல் கேஸ் மருத்துவமனையா என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்ட கேள்விக்கு குணம் மருத்துவமனை மெடிகோ லீகல் கேஸ் வழக்கில் சிசிச்சை வழங்கும் மருத்துவமனை தான் என்று சாட்சி தெரிவித்தார். அ.சா 1 குணம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குணம் மருத்துவமனையில் ஆவணங்களை பெற்று தான் அரசு மருத்துவமனையில் தாக்கல் செய்யப்பட்டது. குணம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற எதிரிகள் தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி தனிப்பட்டு தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி தெரிவித்தார். குணம் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் AR காப்பி தனியாக பெறப்பட்டு தாக்கல் செய்யப்படவில்லை. AR ல் உள்ள பதிவுகள் இந்த வழக்கிற்கு பாதமாக அமையும் என்று அதை பெற்று நான் இந்த வழக்கு கோப்புடன் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. நான் குணம் மருத்துவமனையில் மருத்துவ ஆணங்களை பெற்று அரசு மருத்துவமனையில் கொடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா 1 பசவராஜ் லஷ்மி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொல்லவில்லை. ஆணங்களையும் நான் பெறவில்லை. அ.சா 1 சம்பவத்தின் போது அணிந்திருந்த ஆடைகள் ரத்தம் படிந்திருந்ததா என்றோ அல்லது அதை நான் கைபற்றி சான்று பொருட்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அ.சா 1 ஐ விசாரித்த போது அவரை தாக்கிய ஆயுதத்தின் வடிவத்தை பற்றி சொல்லியுள்ளார். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா 2 சசிதர் என்பவர் சூளகிரி விஜய் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக கூறியதற்கு யாரையும் விசாரிக்கவில்லை சான்று ஆவணங்களும் பெறவில்லை. அ.சா 2 லஷ்மி மருத்துவமனைக்கு சிகிச்சை சென்றதாக எனது விசாரணையில் சொல்லவில்லை. லஷ்மி மருத்துவமனை என்பது ஒரு தனியார் மருத்துவமனை என்றால் சரிதான்.

அ.சா. ஆ 7 ஆன ஆவணத்தில் 19.07.2021 ம் தேதி மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னரும் 19.07.2021 க்கு முன்னரும் அ,சா 2 எங்கு சிகிச்சை எடுத்து கொண்டதற்கான விவரங்களை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா 2 11.07.2021 ம் தேதி சூளகிரி விஜய் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டு வீட்டிற்கு திரும்பி விட்டு பின்னர், 17.07.2021 ம் தேதி லஷ்மி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்று தெரிந்து கொண்டேன். அ.சா 2 இந்த விவரங்களை பற்றி எனது விசாரணையில் சொல்லவில்லை. இந்த வழக்கில் சொல்லப்பபட்ட ஆவணங்கள் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா 2 குணவம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூலங்கள் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னது போல் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்தாதாக சொல்வதும் அதை நான் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்ததாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியில் எந்த இடத்தில் சான்று பொருட்களை மறைத்து வைத்ததாக சொல்லவில்லை என்ற எதிரி தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அன்னையப்பா

வீட்டில்  மறைத்து வைத்திருப்பதாக தெரிவித்தார் என்று சாட்சி கூறினார். கைப்பற்ற பட்ட சான்று பொருட்களை ஆய்விற்கு அனுப்ப நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா 2 எனது விசாரணையில் சம்பவத்தின் போது அ .சா 1 அய்யா , அம்மா, அப்பா என்று கத்தினார் என்றும் , அதை கேட்டு தான் அங்கு சென்றதாக சொல்லியுள்ளாரா என்று எதிரிகள் தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி எனது விசாரணையில் அவ்வாறு  சொல்லவில்லை என்றும் ஆனால் என் பெரியப்பாவின் சத்தம் கேட்டு அங்கு சென்றதாக கூறியதாக சாட்சி தெரிவித்தார்.  அ.சா 2  எனது விசாரணையில் சுரேஷ் பாபு என்பவர்  2 முறை அ.சா 1 குத்தியதாக சொல்லவில்லை ஆனால், வயிற்றில் குத்தியதாக மட்டும் சொல்லியுள்ளார். எனது விசாரணையில் அ.சா 2 தான் கீழே விழுந்த பிறகு முகத்தின் மீது அன்னையப்பா செருப்பு காலால் மிதித்து , முகத்தில் வைத்து அழுத்தி கொண்டதாக எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை ஆனால் கட்டையால் அடித்ததாக மட்டுமே சொல்லியுள்ளார். கிருஷ்ணமூர்த்தியும் அ.சா 1 ம் அசல் வழக்கு எண் 261/2014 என்ற வழக்கில் உள்ள சொத்தை அபகரிப்பதற்கான ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சொல்லப்பபட்டுள்ளவாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.  நான் முறையாக விசாரணை செய்யாமல் தாக்கல் செய்யாமல் ஒரு பொய்யான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுக்கவில்லை என்றாலும் , சான்று பொருட்கள் எதையும் ஆஜர் படுத்த வில்லை என்றலும் , அது வழக்கிற்காக தயார் செய்யப்பபட்டது என்றால் சரிய்லல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு ஏற்றாற்போல் தயார் செய்யப்பபட்டவை என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur